# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,633 — 1959 ජනවාරි 2 වැනි සිකුරාදා — 2.1.1959**

**11,633 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

### யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

**தமிழ்ப் பரீட்சைப் பேறு—1958**

**(அ) பண்டித பரீட்சை—பகுதி 1 (மூன்றும் பிரிவு).**

ப. 1/58. க. கந்தையா.
ப. 3/58. ஐ. குழந்தைவேல்.

**(ஆ) பாலபண்டித பரீட்சை (மூன்றும் பிரிவு).**

பா. 1/58. ச. மங்கையர்க்கரசி.
பா. 31/58. ச. சாவித்திரிதேவி.
பா. 42/58. இ. கனகமணி.

**(இ) பிரவேச பரீட்சை.**

**(1) இரண்டாம் பிரிவு.**

பி. 36/58. சி. பரமேஸ்வரி.
பி. 60/58. ஆ. வள்ளியம்மை.

**(2) மூன்றும் பிரிவு.**

பி. 6/58. இ. கனகாம்பிகை.
பி. 14/58. க. சரஸ்வதி.
பி. 24/58. க. நடராசா.
பி. 28/58. க. நவமணி.
பி. 32/58. சி. புவனேஸ்வரி.
பி. 35/58. சி. வள்ளியம்மை.
பி. 41/58. சி. இந்திராதேவி.
பி. 61/58. ஆ. பொன்னையா.
பி. 67/58. வா. தங்கமுத்து.

**நூன சித்தி—இரண்டாம் பாடவகை.**

பி. 10/58. எ. ப. விமலாதேவி.
பி. 16/58. ச. சிவபாக்கியம்.
பி. 21/58. அ. மகேஸ்வரி.
பி. 27/58. பொ. ஆதிபுவனேஸ்வரி.
பி. 50/58. கா. தெட்சணுமூர்த்தி.
பி. 66/58. இ. மங்களநாயகியம்மை.

**புனர் நூன சித்தி—இரண்டாம் பாடவகை.**

பி. 68/58. க. சிவபாக்கியம்.
பி. 69/58. கோ. பாலசுப்பிரமணியம்.
பி. 74/58. ம. அல்லிமலர்.

காரியதரிசி,
யா. ஆ. பா. ச.

1958 ம் ஞூ டிசம்பர் மீ 27 ந் உ.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனப் பகுதி

நீர்ப்பாசன இலாக்காவால் ரூபா 20,000த்திற்கு அல்லது மேலதிகமாகப் பதியப்பட்டிருக்கும் ஒப்பந்தக்காரரிடம் இருந்து, கந்தளாய் வாடிவீட்டிற்கு அருகாமையில் ஒரு " ஓவசியர் " வீடு கட்டுவதற்காக 13.1.59 காலை 9.30 மணிவரை திருகோணமலையில் உள்ள பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 25.00 கட்டித் தேவையான ரெண்டர் பத்திரங்களை 6.1.59 தொடக்கம் 9.1.59 வரை பெற்றுக்கொள்ளலாம்.

### உணவுப் பகுதி

1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாந் தேதி துவக்கம் 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் தேதிவரையுள்ள காலப் பகுதிக்குக் கீழே காணப்படும் சேவைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், தபால் பெட்டி இலக்கம் 564, யூனியன் பிளேஸ், கொழும்பு, என்னும் விலாசத்திலுடைய விவசாய உணவு அமைச்சின் கேள்விச்சபை அக்கிராசனரால், ஜனவரி மாதம் 15 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**சேவை.**—பால்மாவு உட்படப் பல உணவுப் பொருள்களைப் பூசாவிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டசாலையிலிருந்து சப்ளை நிலையத்துக்கும்/அல்லது பின்வரும் வட்டாரங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் லொறி மூலம் ஏற்றிச் செல்லுதல்.

**வட்டாரம் 1.**—அம்பலாங்கொடை, காலி, வெல்லபொடைப் பற்று, இந்துருவை, பி. டபிள்யூ. கே. மேற்கு, இக்கடுவை, வத்தகமை முதலியன.

**வட்டாரம் 2.**—காலி, எல்பிட்டி முதலியன.

**வட்டாரம் 3.**—அகங்கமை, வெளிகமை முதலியன.

கேள்விப்பத்திரங்கள், கொழும்பு யூனியன் பிளேஸிலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்திலுல் 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் இரண்டு பிரதியில் அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திர மாதிரிப்பத்திரங்கள் பெற விரும்புவோர் முதலில் உணவு அதிகாரி பேரில் 100 ரூபா கட்டுக்காசு கட்டி அதற்கான பற்றுச்சீட்டைக் காட்ட வேண்டும். மேலும் விபரவிளக்கத்தின் நாலாவது சரத்தின் (ii) ஆம் (iii) ஆம் நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். இதுபற்றிய மேலதிக விபரங்களை உணவு அதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெட்டி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு, 1958 ம் ஞூ டிசம்பர் மீ 26 ந் உ.

---

### வித்தியா பகுதி

**விளையாட்டு உபகரணங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59**

விளையாட்டு உபகரணங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பி. ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியா பகுதி (விநியோகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1958 ம் ஞூ டிசம்பர் மீ 29 ந் உ.

## வித்தியா பகுதி

கீழ்க்குறிக்கப்படும் பாடசாலை வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு 2, மலே வீதி, முதல் மாடியிலுள்ள வித்தியாபகுதி கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும் :—

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| (1) யா/மட்டுவில் அரசினர் சிரேஷ்ட பாடசாலை | விஞ்ஞான அறைக் கட்டிடம் அமைத்தல் |
| (2) யா/ஏழாலை அரசினர் சிரேஷ்ட பாடசாலை | விஞ்ஞான அறைக் கட்டிடம் அமைத்தல் |
| (3) யா/விக்ரோறியாக் கல்லூரி | விருந்தையுடன் கூடிய எட்டு வகுப் பறைகள் அமைத்தல் |
| (4) வ/கனகராயன்குளம் அ. த. க. பாடசாலை | பாடசாலைக் கட்டிடம், தலைமையாசிரியர் வீடு, மூன்று மலகூடங்கள் அமைத்தல் |
| (5) யா/மசார் அ. த. க. பாடசாலை | பாடசாலைக் கட்டிடம், தலைமையாசிரியர் வீடு, மூன்று கக்கூசுகள் அமைத்தல் |
| (6) வ/குமுளமுனை அ. த. க. பாடசாலை | தலைமையாசிரியர் வீடு, மூன்று மலசல கூடங்கள் அமைத்தலும், பாடசாலைக் கூரை திருத்துதலும் |
| (7) வ/கெப்பைப்பிலவு அ. த. க. பாடசாலை | பாடசாலைக் கட்டிடம், தலைமையாசிரியர் வீடு, மூன்று மலசலகூடங்கள் அமைத்தல் |
| (8) வ/புதுமைச்சிநாதகுளம் அ. த. க. பாடசாலை | பாடசாலைக் கட்டிடம், தலைமையாசிரியர் வீடு, மூன்று மலகூடங்கள் அமைத்தல் |

யா :—யாழ்ப்பாணப் பகுதி
வ :—வவுனியாப் பகுதி.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள், 1 ம், 2 ம் வேலைகளுக்கு வித்தியாப்பகுதியில் ரூபா 20,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும், பகிரங்க மராமத்து இலாக்காவில் ரூபா 40,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும், வேலைகள் 3, 4, 5, 7, 8 க்கு வித்தியாபகுதியில் ரூபா 17,500 க்கும் அதற்கு மேலும் பதியப் பட்டவர்களுக்கும், பகிரங்க மராமத்து இலாக்காவில் ரூபா 35,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும், 6 ம் வேலைக்கு வித்தியா பகுதியில் ரூபா 13,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும், பகிரங்க மராமத்து இலாக்காவில் ரூபா 26,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும் 1959 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி, வியாழக்கிழமை 3.30 மணி வரையில் வழங்கப்படும். வேலைகள் ஒவ்வொன்றுக்கும் (கீழே AC) வித்தியா பகுதி, கொழும்பிலோ அல்லது வெளியூராயில் அப்பகுதிக் கச்சேரியில் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டு வடமாகாண வித்தியாதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்டல் ஓடர் முதலியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

3. கேள்விப் பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் வட மாகாண வித்தியாதிகாரியிடம் பெற்வேண்டும். இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப்பத்திரத்தின் 9 ம் பந்தியைக் கவனிக்கவும். இலங்கைத் தொழிலாளர்கள் மாத்திரம் வேலைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

5. அரசாங்கத்தில் தற்பொழுது வேலைகளை எடுத்துச் செய்துவரும் ஒப்பந்தக்காரர்கள், அவ்வேலைகள் திருத்திகரமாக நடைபெறுகின்றன என்று அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயுள்ள மேலதிகாரிகளிடம் இருந்து அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றுக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப் பிக்கும்பொழுது காண்பிக்க வேண்டும். அத்தாட்சிப் பத்திரங்கள் கீழ்க் காட்டிய மாதிரிப்பத்திரத்தில் அமைய வேண்டும்.

வேலை விபரம் : ————
ஒப்பந்தத் தொகை : ————.
ஒப்பந்தத் திகதி : ————.
வேலை முடியவேண்டிய திகதி (தவணைகள் குறிக்கப்படவேண்டும்) : ————.

வேலை முன்னேற்றமும் வேலையும் திருப்திகரமானதா இல்லையா ?

பகுதி இலாகா தலைவரின் கையொப்பம் : ————.
என்னுல்/எம்மால் இலங்கை அரசாங்கத்தின்கீழ் எடுத்திருக்கும் எல்லா வேலைகளுக்குமான வேலை விபரம்.

————,
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

திகதி : ————.

6. ஒரு விண்ணப்பக்காரன், தான் தற்பொழுது எடுத்துச் செய்யும் வேலைகளின் விபரங்களை வேண்டுமென்று விண்ணப்பிக்கும்பொழுது மறைத்தால் அரசாங்கம், அவரது ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய எந்த நேரமும் அதிகாரம் உண்டு.

7. இரண்டாம் பந்தியில் சொல்லப்பட்டபடி வடமாகாண வித்தியாதிகாரியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் தபால் மூலம் அனுப்புவதாயின் பதிவுசெய்து அனுப்பவேண்டும். இவ்வேலைகளுக்கான படங்களும், மற்றும் விபரங்களும் வடமாகாண வித்தியாதிகாரியிடமிருந்து அறிந்துகொள்ளலாம். தபால் மூலம் அனுப்பு பவர்கள், தலைவர், கேள்விச் சபை, வித்தியாபகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 என்று விலாசமிட்டு அனுப்பவேண்டும். என்வலப்பில் இடதுபக்க மேல் மூலையில் வேலை விபரமும், விண்ணப்பிப்பவரின் பெயர், விலாசமும் எழுதப்படல் வேண்டும். நேரில் சமர்ப்பிப்பவர்கள் கொழும்பு வித்தியா பகுதியிலுள்ள வித்தியாதிபதியின் உதவியாளரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

8. 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் கொழும்பு 2, மலே வீதியிலுள்ள வித்தியாபகுதியில் பரிசீலனை செய்யப்படும். அப்பொழுது ஒப்பந்தக்காரர்கள் பிரசன்னமாயிருக்கலாம். அவர்களுக்கு விண்ணப்பங் களின் தொகையும் பெயரும் வாசித்துக் காட்டப்படும்.

9. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து 6 வார காலத்துக்கு விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும். இவ்வேலைகளுக்கான சகல விபரங்களும் வடமாகாண வித்தியாதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ள லாம்.

சி. உ. சோமசேகரம்,
வித்தியாதிகாரி.
வ. மா.

வித்தியா கந்தோர்,
யாழ்ப்பாணம்,
1958 ம் ஆண்டு மார்கழி 29 ந் வெ.

---

## கல்விப் பகுதி

கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கல்விக் காரியாலயம் முதலாம் மாடி, மலாய் வீதி, கொழும்பு 2, கேள்விச் சபை அக்கிராசனர் அவர்களால் 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| திரி/எதபெண்டிவெவ சிங்கள கலவன் பாடசாலை | பாடசாலைக் கட்டிடம், ஆசிரியர் விடுதி, கிணறு, மலகூடங்கள். |

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்வி இலாகாவினுலும் பகிரங்க வேலை இலாகாவினுலும் பதிவு செய்யப்பட்ட கொந்திருத்துக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். மேலே குறிக்கப்பட்ட வேலைக்கு கல்வி இலாகாவில் 22,500 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் அல்லது பகிரங்க வேலை இலாகாவில் 45,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் (A. C.) கீழ கல்விக் கந்தோரிலோ அல்லது வெளியூராயில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டை கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1959 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி பிற்பகல் 3.30 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். செக்குகள், போஸ்ரல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ் மாகாண கல்வி அதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரமே பிணைப்பணம் கட்டும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

4. இவ்வேலைகளுக்கு 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப்பத்தி ரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவு செய்த தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத உள்நாட்டு விண்ணப்பக்காரர் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதி மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்வி அதிபரின் காரியாலய உதவியாளரிடம் சேர்த்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத் தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் உறைகளின் மீது வேலையின் விபரங்களும் விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டும். கீழ்மாகாண கல்வி அலுவலகத்தில் இவ்வேலைகளுக்குரிய படங்களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

5. 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப் படும். கேள்விப்பத்திரங்களைத் திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப் பக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமா யிருக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத் தொகைகளும் விண் ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக் காட்டப்படும்.

6. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை யினுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

7. இலங்கையரும் குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்ப வருமான வேலையாட்களையே வேலைக்கு அமர்த்தவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின் படி ஒழுகத் தவறினுல் அத்தவறு ஒப்பந்த ஷரத்துகளை மீறியதாகக் கணிக்கப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவும் கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங் களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலை யாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதி இல்லாமல் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

சி. தணிகாசலம்,
பதில் கல்வி அதிகாரி, கீ. மா.

கல்வி அலுவலகம், மட்டக்களப்பு,
1958 ம் ௵ டிசம்பர் ௴ 27 ந் உ.

---

## கல்விப் பகுதி

கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கல்வி அமைச்சு கேள்விச் சபை அக்கிராசனர் அவர்களால் 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| மட்/ஆரைப்பற்றை சிரேஷ்ட பாடசாலை | ஐந்து வகுப்பறைகள், நாலு வகுப்பறை களும், களஞ்சிய அறையும் காரியாலய மும், விஞ்ஞானப் பகுதிக் கட்டிடம், நாலு மலகூடங்கள், ஒரு கிணறு |

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்வி இலாகாவி னுலும் பகிரங்க வேலை இலாகாவினுலும் பதிவு செய்யப்பட்ட கொந்தி ருத்துக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். மேற் குறிக்கப்பட்ட வேலைக்கு கல்வி இலாகாவில் 40,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் அல்லது பகிரங்க வேலை இலாகாவில் 80,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் (A. C.) இனை கல்விக் கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டை கீழ் மாகாணக் கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1959 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி பிற்பகல் 3.30 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். செக்குகள், போஸ்ரல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ் மாகாண கல்வி அதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரமே பிணைப்பணம் கட்டும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

4. இவ்வேலைகளுக்கு 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ் மாகாண கல்வி அதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவு செய்த தபால்மூலம் அனுப்பப் படவேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத உள்நாட்டு விண்ணப்பக்காரர் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதி மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்வி அமைச்சின் காரியாலய உதவியாளரிடம் சேர்த்து அவைகளைப் பெற்றுக்கொண்ட தற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறைகளின் மீது வேலையின் விபரங் களும் விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டும். கீழ் மாகாண கல்வி அலுவலகத்தில் இவ்வேலைகளுக்குரிய படங்களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

5. 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் பரிசீலனை செய்யப் படும். கேள்விப்பத்திரங்களைத் திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப் பக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமா யிருக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத் தொகைகளும் விண் ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக் காட்டப்படும்.

6. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை யினுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

7. இலங்கையரும் குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்ப வருமான வேலையாட்களையே வேலைக்கு அமர்த்தவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத் தவறினுல் அத் தவறு ஒப்பந்த ஷரத்துகளை மீறியதாகக் கணிக்கப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவும் கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங் களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்ம தத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலையாட் களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதி இல்லாமல் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

சி. தணிகாசலம்,
பதில் கல்வி அதிகாரி, கீ. மா.

கல்வி அலுவலகம், மட்டக்களப்பு,
1958 ம் ௵ டிசம்பர் ௴ 27 ந் உ.

---

## விளம்பரம்

1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 14 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 16 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல் களும் 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ௵ மார்கழி (டிசம்பர்) ௴ 27 ந் உ.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும்
விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மனி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **" நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்**—

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருடச் சந்தா | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.